பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**27 06 2026** **7 15**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** கூட்டுறவு **Taxi** சேவையை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று குஜராத்தில் தொடங்கி வைக்கிறார்.

**2.** தேசிய கல்விக் கொள்கை உயர்கல்வியை உலகத் தரத்திற்கு உயர்த்த முக்கியத்துவம் அளிப்பதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

**3.** இந்தியா - இங்கிலாந்து இடையிலான விரிவான பொருளாதார ஒப்பந்தம், இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் முக்கிய மைல்கல் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

**4.** ஹார்முஸ் நீரிணைப்பில் சரக்குக் கப்பல் மீது ஈரான் ட்ரோன் தாக்குதல் நடத்தியதற்குப் பதிலடியாக, ஈரானின் பல்வேறு இலக்குகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது.

**5.** உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் பிரான்ஸ் **4-1** என்ற கோல் கணக்கில் நார்வே அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

கூட்டுறவு **Taxi** சேவையை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று குஜராத்தில் தொடங்கி வைக்கிறார்.

**Bharat Taxi** என்று பெயரிடப்பட்டுள்ள இந்த சேவையை குஜராத் மாநிலம் காந்திநகரில் இன்று அவர் தொடங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் மாநில முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல், துணை முதலமைச்சர் திரு. ஹர்ஷ் சங்கவி மற்றும் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட டாக்சி ஓட்டுநர்கள் பங்கேற்கிறார்கள்.

போக்குவரத்து துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்தும் இத்திட்டம், ஓட்டுநர்களுக்கு மட்டுமல்லாமல் பொதுமக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று மாநில கூட்டுறவுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் கூட்டுறவு சங்கத்தின் மூலம் இந்த சேவை தொடங்கப்பட்டுள்ளதால் **Taxi** ஓட்டுநர்கள், ஒரு பணியாளர்களாக இல்லாமல் பங்குதாரர்களாகவும் இருப்பார்கள் என்று குஜராத் மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தேசிய கல்விக் கொள்கை உயர்கல்வியை உலகத் தரத்திற்கு உயர்த்த முக்கியத்துவம் அளிப்பதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

மும்பை ஐ.ஐ.டி - நியூயார்க்கின் **Suny Old Westbury** பல்கலைக்கத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள கல்வி சார்ந்த ஆராய்ச்சி ஒப்பந்தத்தை வரவேற்று சமூக வலைதளத்தில் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

வரும் காலங்களில் பொறியியல், ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் இரு நாடுகளின் கல்வி நிறுவனங்கள் இணைந்து செயல்பட இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசியக் கல்விக் கொள்கை நாட்டின் முன்னணி கல்வி நிறுவனங்கள், சர்வதேச அளவில் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயல்பட ஊக்கமளிக்கிறது என்றும் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

<<<<>>>>

இந்தியா - இங்கிலாந்து இடையிலான விரிவான பொருளாதார ஒப்பந்தம், இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் முக்கிய மைல்கல்

என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

லண்டனில் நேற்று வர்த்தக மாநாடு ஒன்றில் பேசிய அவர், இந்த ஒப்பந்தம் எதிர்காலத்தில் மாபெரும் வாய்ப்புகளை உருவாக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

வளர்ச்சிக்கான புதிய எல்லைகளை இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தும் என்றும், இரு நாடுகளின் வர்த்தக நிறுவனங்களும் தங்களுக்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்த இது உதவும் என்றும் அவர் கூறினார்.

புதுமையான முயற்சிகளை விரைவுபடுத்தவும், இரு நாடுகளுக்கு பயனளிக்கும் முதலீடுகளை ஈர்க்கவும் உதவும் என்றும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<>>>>

கொலம்பிய அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள திரு. அபிலார்டோ டி லா எஸ்ப்ரியெல்லாவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்துச் சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ள அவர், கொலம்பிய நாட்டுடனான நெருங்கிய நட்புறவை இந்தியா மிகவும்

மதிப்புடன் கருதுவதாகவும், அனைத்துத் துறைகளிலும் இந்த உறவு தொடர்ந்து வளர்ந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

திரு. அபிலார்டோ பதவிக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்திய பிரதமர், இரு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்காக அவருடன் இணைந்து பணியாற்ற ஆவலுடன் காத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சாமானிய மக்களின் விமானக் கனவை மத்திய அரசின் உடான் திட்டம் நனவாக்கி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழகத்தின் சேலம் மாவட்டம் ஏற்காடு பகுதியை சேர்ந்த மலைவாழ் மக்கள் நேற்று சேலத்தில் இருந்து பெங்களூருவிற்கு விமானத்தில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

தன்னார்வல அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வு மலைவாழ் மக்களிடம் மறக்க முடியாத நினைவுகளை ஏற்படுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Vijayakumar — 50 Sec)**

<<<<>>>>

ஹார்முஸ் நீரிணைப்பில் சரக்குக் கப்பல் மீது ஈரான் ட்ரோன் தாக்குதல் நடத்தியதற்குப் பதிலடியாக, ஈரானின் பல்வேறு இலக்குகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின்படி, ஈரானில் உள்ள ஏவுகணை மற்றும் ட்ரோன் சேமிப்பு மையங்கள் மற்றும் கடற்கரை ரேடார் நிலையங்களை குறிவைத்து அமெரிக்க போர் விமானங்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளன.

இதற்கு முன்னதாக, சிங்கப்பூரைச் சேர்ந்த 'எவர் லவ்லி' என்ற சரக்குக் கப்பல் மீது ஈரான் ட்ரோன் தாக்குதல் நடத்தியது.

ஜூன் 17-ம் தேதி கையெழுத்தான போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஈரான் மீறியுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ள அமெரிக்க அதிபர் திரு. திரு. டோனல்ட் ட்ரம்ப், இந்தத் தாக்குதல் பொறுப்பற்ற செயல் என்றும், இதற்கான விளைவுகளை ஈரான் சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்திருந்தார்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, ஓமன் கடற்கரைக்கு அருகில் வணிகக் கப்பல்கள் மீதான பாதுகாப்பு அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக, அப்பகுதியில் சிக்கியிருந்த கப்பல்களை வெளியேற்றும் பணிகளை சர்வதேச கடல்சார் அமைப்பு தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

கப்பல்களின் பாதுகாப்பான போக்குவரத்திற்கு உரிய உத்தரவாதம் கிடைக்கும் வரை இப்பணிகள் தொடராது என்று அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

இந்த மோதல் போக்கினால், அப்பகுதியில் போக்குவரத்து மற்றும் வணிக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

<<<<>>>>

இஸ்ரேல் மற்றும் லெபனான் நாடுகளுக்கு இடையே நீண்டகால அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. மார்கோ ரூபியோ அறிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின்படி, இரு தரப்பிலும் உடனடியாக போர் நிறுத்தம் அமல்படுத்தப்படும் அதேநேரம், லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு அனைத்துத் தாக்குதல்களையும் நிறுத்திவிட்டு, தெற்கு லெபனான் பகுதியிலிருந்து முற்றிலுமாக வெளியேற வேண்டும் என்பது ஒப்பந்தத்தின் முக்கிய நிபந்தனை என்று அமெரிக்க

வெளியுறவுத்துறை அமைச்சகம் தனது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளது.

இறையாண்மை கொண்ட லெபனான் அரசாங்கத்திற்கும், இஸ்ரேல் அரசாங்கத்திற்கும் இடையே அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் கூடிய இந்த ஒப்பந்தத்தை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைவதாகவும் அதில் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் மத்திய கிழக்கில் நிலவும் பதற்றத்தைத் தணித்து, அமைதியை நிலைநாட்ட உதவும் என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

வெனிசுலாவில் நிகழ்ந்த சக்திவாய்ந்த இரு நிலநடுக்கங்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 920-ஆக உயர்ந்துள்ளது.

இந்த இயற்கை பேரிடரில் சுமார் 3 ஆயிரத்து 360 பேர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் கராகஸ் மற்றும் அதனைச் சுற்றியுள்ள La Guaira கடற்கரை நகரங்களில் கட்டிடங்களின் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

நிலநடுக்கத்தின் மையம் கடல்பகுதியில் இல்லாமல் நிலப்பகுதிக்கு அருகில் இருந்ததால் சேதம் அதிகமாக உள்ளது என்று அந்நாட்டில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் துயரமான தருணத்தில், இந்தியா வெளிப்படுத்திய ஆதரவுக்கும் ஒற்றுமைக்கும் வெனிசுலா இடைக்கால அதிபர் திருமதி டெல்சி ரோட்ரிக்ஸ் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டுள்ளார்.

இந்திய மக்களுக்கும், வெனிசுலா மக்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் உணர்வை இது பிரதிபலிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மீட்புப் பணிகளுக்கான உதவிகளை வழங்க பல நாடுகள் முன்வந்துள்ளன. இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களைக் கண்டறியும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

<<<<>>>>

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் பிரான்ஸ் **4-1** என்ற கோல் கணக்கில் நார்வேயை வென்றது.

பாஸ்டனில் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் தொடக்கம் முதலே பிரான்ஸ் முன்னிலை வகித்தது.

டொரான்டோவில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் செனகல் **5-0** என்ற கோல் கணக்கில் ஈராக்கை வென்றது.

உருகுவே - ஸ்பெயின், இடையிலான ஆட்டமும், சவுதி அரேபியா - **Cobo verde** இடையிலான மற்றொரு ஆட்டமும் தற்போது நடைபெற்று வருகிறது.

இன்று காலை **8.30** மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் நியூசிலாந்து - பெல்ஜியத்தையும், எகிப்து - ஈரானையும் எதிர்கொள்கின்றன.

**<<<<The End>>>>**